REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 12உ சனி (27—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 13உ ஞாயிறு (28—11—54) [இதழ் 143

பெரியார் ஈ. வெ. ராமசாமி

சிங்கப்பூர், நவ. 25—

திராவிடர் கழகத் தலைவரான பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், பர்மாவில் நடைபெறும் உலக புத்தர் மாநாட்டில் கலந்துகொண்டு, இந்தியா திரும்புமுன்னர் மலேயாவிற்கு வருகைதரக்கூடும் எனத் தெரிகிறது.

பர்மாவில் டிசம்பர் 16-ந் தேதி வரை சுற்றுப்பயணம் செய்துவிட்டு, பின் சயாம், மலேயா முதலிய இடங்களுக்கு வருவார்கள் எனத் தெரிகிறது.

'பொதுவுடமை கட்சியின் பலக்குறைவே அதன் அச்சத்திற்கும் ஆத்திரத்திற்கும் அடிப்படை'

'திறமையும், பண்புள்ள பிரச்சாரமும் அக்கட்சி அறியாதவை'

'சொந்தக் கட்சிக்கு ஆக்கம் தேடவே முன்னணி கோரிக்கை'

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முரண்பாடு குறித்து ஜெயசூரியா

"மக்கள் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த என்னையும், பொதுவுடைமைக் கட்சியைச் சேராத மற்றவர்களையும் பொதுவுடைமைக் கட்சியினர் ஏமாற்றிவிட்டதின் காரணமாகவே, நான் அம்முன்னணியில் கொண்டிருந்தத் தொடர்பை அறுத்துக்கொண்டேன்."

"இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினரின் ஆற்றலின்மையும், பண்பற்ற பிரச்சார முறையும், ரஷ்யாவிற்கும், சீனாவிற்கும் இலாபகரமானதாக இல்லாததுடன், நஷ்டத்தையும் கேட்டினையும் உண்டாக்குவதாக உள்ளன."

"ஒரு பெருங் கருங்கற்பாறை போன்று உள்ள இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, மற்றச் சிறு சிறு அரசியல் குழுக்களுடன் ஒரு ஒத்த ஏற்பாட்டுடனும், மாசற்ற மனப்போக்குடனும் என்றும் ஒன்றுபட்டு இயங்காது என்ற கசப்பான படிப்பினையை நான் கற்றுக்கொண்டேன். அக்கட்சி, சொந்தத்தில் தனக்குள்ள பலக் குறைவை உள்ளூர உணர்ந்திருக்கிற காரணத்தினுல், அதனிடத்தில் அச்சமும் ஆத்திரமும் குடிகொண்டு இருக்கின்றன."

"சென்னையில் ஒரு வகுப்பு (?) நிறுவனமான திராவிடர் கழகத்துடன் ஒரு தேர்தல் ஒப்பந்தத்தைப் பொதுவுடைமைக் கட்சி செய்துகொண்டிருந்தது. மார்க்சீய புரட்சி வழி நிற்காத பிரகாசத்துடனும் பிரஜா கட்சியுடனும் ஒன்றுபட்டு ஆந்திராவில் அமைச்சர் குழுவை அமைக்க அக்கட்சி முயற்சித்தது. மக்கள் சபையில் என்னுடன் ஒத்துழைக்க இணங்கிய அதே மக்கள் சோஷலிஸ்டு கட்சியுடன், திரு—கொச்சியில் மந்திரி சபையை உருவாக்க அக்கட்சி முன்வந்தது. உண்மை இவ்வாறு இருக்க, எனது செயல் குற்றமுடையதாகவும், அக்கட்சியின் செயல் அரசியல் அரும் பணியாகவும் எப்படி ஆகிவிடக்கூடும்?"

"மீண்டும் ஆந்திராவில் கம்யூனிஸ்டுகள், சென்ற வாரத்தில் ம. சோ. கட்சியினர் கூட மட்டுமல்ல—ரங்காவினுடைய கிருஷிக் லோக் கட்சியுடன் கூடச் சேர்ந்து மந்திரி சபை அமைக்க முயற்சித்தார்கள்,"

—இவ்வாறு, டாக்டர் ஜெயசூரிய என்ற மக்கள் சபை அங்கத்தினர் தானும், கம்யூனிஸ்டு அல்லாத அங்கத்தினர்களும், கம்யூனிஸ்டுகளால் ஏமாற்றப்பட்டதாலேயே மக்கள் ஜனநாயக முன்னணி தலைவர் பதவியை ராஜிஞமா செய்திருப்பதாக ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுகிறார்:—

"1948-ல், கல்கத்தா மாநாட்டில், கம்யூனிஸ்டுகள், மா-சே-துங்கை, 'புரட்சியின் விரோதி' என்று கூறியது போல நாங்கள் கூறவில்லை; பின்னர் 1949-ல், 'சீனாவின் விடுதலை வீரன் மா-சே-துங் தான்,' என்று கூறி, 1948ல் கூறியதற்கு மன்னிப்புக் கோரியதும் கிடையாது.

"காளிதாசனை, 'பிரபுக்களின் புலவர்' என்று நாங்கள் கூறியதும் இல்லை—கம்யூனிஸ்டுகளைப் போல; பின்னர், ரஷ்யா, காளிதாசனின் கவிதைகளை தனது மொழியில் மொழி பெயர்ப்பதாக அறிவித்ததும், 'காளிதாசன் ஒரு முற்போக்குக் கவிஞன்,' என்றும் கூறியதில்லை."

மேலும் அவர், கூறுகிறார்:—

"நான், மக்கள் சபையில், கம்யூனிஸ்டுகளைக் காட்டிலும், பி.-சோ. கட்சியினருடன் அதிகத் தொடர்பு கொள்வதாகக் குற்றம் சாட்டுகிறார்களே, நான் கேட்கிறேன்—இந்தக் கம்யூனிஸ்டுகள் யாருடன்தான் ஒன்று சேர முயற்சிக்கவில்லை? ஒன்று சேராமலிருந்தார்கள்"

கம்யூனிஸ்டுகளின் கவனத்திற்கு அண்மையில் ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி காரியதரிசி நிகிதா க்ருஷேவ் விடுத்துள்ள அறிக்கையைக் கொண்டுவர விரும்புகிறேன்.

மத நம்பிக்கை கொண்ட மக்கள் விஷயத்தில், ஆங்குள்ள கம்யூனிஸ்டுகள் நடந்துகொண்ட முரட்டுத்தனமான முறை குறித்து அவர் கண்டித்திருக்கிறார்.

"ரஷ்ய அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள மனச்சாட்சிப்படி நடக்கிற உரிமையை மறுத்து, மக்க

(4-ம் பக்கம் பார்க்க)

திரு-கொச்சி சர்க்கார் கோரிக்கைக்கு இணங்க சென்னை சர்க்கார் மறுப்பு?

தமிழர் - மலையாளி மோதுதல் இங்கும் உண்டாகுமென அச்சம்

நிலைமையை விளக்கி பண்டிதருக்கு சென்னை முதல் மந்திரி கடிதம்?

"திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தின் விளைவினால் பீதியுற்று, சென்னை மாநிலத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் திரு—தமிழரைக் கைது செய்து திரு—கொச்சி சர்க்காரிடம் ஒப்படைத்தால், சென்னை மாநிலத்திலும் தமிழர்—மலையாளி தகராறு கிளம்பிவிடும்; அவ்வாறு தகராறுகள் ஏற்படாதிருக்க வேண்டுமானால், திரு—கொச்சி சர்க்காரின் வேண்டுகோளைப் புறக்கணிக்க வேண்டியதாக இருக்கிறது,"

—என்று, சென்னை முதலமைச்சர் காமராசர், திரு—கொச்சி சர்க்காரின் வேண்டுகோள் பற்றி பிரதமர் நேரு பண்டிதருக்கும், இந்திய உள்நாட்டமைச்சர் கட்ஜுவுக்கும் கடிதம் எழுதியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

—"தினமலர்"

தி-கொ. அமைச்சர்குழு அவலட்சணம்

'திரு—கொச்சி தமிழர் கோரிக்கை நியாயமானதே' என்கிறார் ஒரு அமைச்சர்

'அக்கோரிக்கையைஅமைச்சர்குழு எதிர்க்கிறது' என்கிறார் இன்னொரு அமைச்சர்

'இப்பொழுதுள்ள எல்லைகளை திருத்துவது கூடாது' என்கிறார் முதல் அமைச்சர்

திருநெல்வேலி—

"திரு—கொச்சியில் உள்ள தமிழ் பேசும் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கை நியாயமானதே,"

—என்று, திரு-கொச்சி ம. சோ. மந்திரி சபையில் நிதி மந்திரியாயுள்ள திரு. பி. எஸ். நடராஜ பிள்ளை தெரிவித்துள்ளார்.

பீர்மேடு, தேவிகுளம் ஆகிய இடங்களில் உள்ள தோட்டங்களில் பணியாற்றும் தமிழ் தொழிலாளரை விரட்டிவிட்டு, மலையாளிகளைக் குடியேற்றப்போவதாக அறிவிக்கப்படுகிற திட்டம் பற்றிக் கேட்டபோது, அவர், "முன்னாள் இராணுவத்தினருக்கும், நிலமில்லாத ஏழைகளுக்கும் நிலம் தருவது பற்றிய திட்டமொன்று திரு—கொச்சி அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது; இந்தத் திட்டம், மொழி அல்லது வகுப்பு அடிப்படையில் அமையவில்லை," என்று தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளரிடம் பேசுகையில், திரு. நடராஜபிள்ளை, "திரு-தமிழர் கிளர்ச்சியை அடக்க, கடுமையான நடவடிக்கைகளை திரு-கொச்சி அரசாங்கம் மேற்கொண்டது" என்ற குற்றச்சாட்டை மறுத்தார். "திரு.-த.நா. காங்கிரஸ், சட்டத்தை மீறிய போதுதான் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது; சர்க்கார், சட்டத்தை நிலைநாட்ட மேற்கொண்ட எந்த நடவடிக்கையும், கொடுமையானதல்ல; அதிகமானதல்ல," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

* * *

திரு-கொச்சி முதன் மந்திரியான பட்டம் தாணுப்பிள்ளை, இப்போதுள்ள மாநில எல்லைகள் திருத்தியமைக்கப்படுவதை விரும்பவில்லை; அப்படித் திருத்தியமைப்பது நாட்டு மக்களின் நலனுக்கு உகந்ததல்ல என்று கூறிவருகிறார்.

* * *

திரு - கொச்சி தொழிலாளர் மந்திரியான திரு. பி. கே. குஞ்சு என்பவர், "திரு-கொச்சியில் உள்ள தமிழ் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைவதை திரு-கொச்சி மந்திரி சபை நிச்சயமாக எதிர்க்கிறது: மொழிவழி மாநில அமைப்பை எங்கள் அரசாங்கம் ஆதரிக்கவில்லை," என்று இம்மாதத் துவக்கத்தில் கூறியுள்ளார்.

ம. சோ. கட்சி நிர்வாகக் குழு இராஜினமா?

டாக்டர் லோகியா கோஷ்டிக்கு வெற்றி?

நாகபுரி, நவ. 26—

திரு—கொச்சி பிரச்சினை உட்பட பல்வேறு அடிப்படைப் பிரச்சனைகள்மீது கருத்து வேறுபாடும், பிளவுமிருப்பதினால், மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் தேசீய நிர்வாகக் குழு ராஜினமாச் செய்ய முடிவு செய்திருப்பதாக அசோக் மேத்தா நிருபர்களிடம் கூறினாராம்.

நாளைய மாநாட்டின்போது ராஜினமா தாக்கல் செய்யப்படுமெனவும், மாநாடு புதிய நிர்வாகக் குழுவினரைத் தேர்ந்தெடுக்கும் என்றும் அவர் கூறினாராம்.

ஜாமீன் மறுப்பு

நாகர்கோவில், நவ. 25—

திரு—கொச்சி சட்டசபை அங்கத்தினரான திரு. ஏ. சைமன், மற்றும் வி. எஸ். பிலிப்சவரிமுத்து, விசுவநாதன் ஆகியோரின் ஜாமீன் விடுதலை மனுவை பத்மநாதபுரம் உதவி நீதிபதி நிராகரித்தார் எனத் தெரிகிறது.

இவர்கள், திரு—கொச்சியில் கடந்த ஆக. 11-ல் 'விடுதலைதினத்' தன்று நடைபெற்ற சம்பவங்களை ஒட்டி, திரு—கொச்சி சர்க்காரால் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பட்டதாரிகள் பலர் ஓராசிரியர் வேலைக்கு மனு!

130 இடங்களுக்கு 2000 பேர் போட்டி

மதுரை மாவட்டத்தில் திறக்கப்படவிருக்கும் 130 ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர் பணிபுரிய சுமார் 2000 மனுக்கள் வந்திருப்பதாக மதுரை மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவர் எம். எஸ். சிங்கராயர் தெரிவித்துள்ளார். அவர்களில் பலர் பட்டதாரிகளாம்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 27—11—1954 சனி

தாழ்ந்து நிமிரும் ஈச்சை!

'நமது வாழ்க்கைப் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் நாம் விஞ்ஞான நோக்குடன் அணுக வேண்டும்; இதன் காரணமாகவே நான் விஞ்ஞானத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறேன்,' எனப் பண்டிதர் நேரு, வாய்ப்பு நேருகின்றபொழுதெல்லாம் இடித்து இடித்துக் கூறிவருகின்றார். அவரைப்போன்றே, அவர் அமைச்சர் குழுவில் உள்ள மற்ற அமைச்சர்களும் விஞ்ஞானத்திற்கு மதிப்புத் தருகிறார்கள் எனக் கூறுவதற்கில்லை.

அவர்கள், விஞ்ஞான நோக்கிற்கு அதிகச் சிறப்பு காட்டினாலும் காட்டாமற்போனாலும், திராவிட நாட்டு மக்களை, அவ்வளவாக அது பாதித்துவிடப் போவது கிடையாது. ஆனால், இங்குள்ள எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டுள்ள பொது வாழ்வினர், விஞ்ஞானக் கண்ணோட்டத்தை வரவேற்பதும் புறக்கணிப்பதும், நமது நாட்டு மக்களின் தினசரி வாழ்க்கையில் கண்டிப்பாகப் பிரதிபலித்தே தீரும் என்பதில் ஐயமில்லை. எனவே, பொது வாழ்வினர் பேச்சிலும், எழுத்திலும் நாம் மிகமிக விழிப்பாக இருக்கவேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கவேண்டியது இன்றியமையாததாகிறது.

பதவி வெறி கொண்டு அலையும் பார்ப்பனப் பெருங்கிழவரான ஆச்சாரியார் முதல், எப்பொழுதோ இடம் கிடைத்தால் சண்டப்பிரசண்டம் செய்துவரும் சி. ஆர். சீனிவாச அய்யங்கார் வரையில், பொதுச் சேவையில் ஈடுபட்டுவரும் 'நல்லவர்கள்' அனைவரின் பேச்சும் எழுத்தும், விஞ்ஞான நோக்கை நாட்டு மக்களிடைப் புகுத்துவதாகவோ, அதன் முக்கியத்துவத்தை, அவர்களை உணரச் செய்வதாகவோ இதுவரை இருந்ததில்லை. ஆனால், அதற்கு மாறாக மூட மதியைப் பெருக்குவதற்குத் துணை நிற்பனவாகவே மேற்படி 'நல்லவர்'களின் சேவை இருந்துவந்திருக்கிறது.

மடத்துத் தம்பிரான்களும், மாரியம்மன் கோயில் பூசாரிகளும், சிவன் கோயில் குருக்களும், வைஷ்ணவ ஆலய பட்டர்களும், 'சத்கதா காலட்சேபம்' செய்யும் மாமிசப் பிண்டங்களும், ஏனையக் குடிகளாரும் அடிகளாரும், விஞ்ஞான ஒளியை விரட்டியடிக்கத் தங்கள் மத மடையைத் துணை கொள்வதில் ஆச்சரியப்படத்தக்கது ஒன்றுமில்லை. அது, அவர்கள் 'வாழ்க்கைத் தர்மம்' என நாம் அலட்சியமாக இருந்துவிடலாம். அவர்கள் மடமைக் கூச்சலையும், கத்தலையும் பொதுமக்களும் அவ்வளவாகப் பொருட்படுத்தவுமாட்டார்கள்.

ஆனால், மேல் நாட்டு கல்வி அறிவு வாய்க்கப்பட்டவர்களின் முன்னேறும் பிள்ளைகளாக உள்ள ஆச்சாரியார் வர்க்கத்தின் ஆத்மார்த்தப் பேச்சு, சாதாரண மக்களுக்குக் கேடுபயக்கக்கூடியது என்பதோடுமட்டுமல்லால், மீண்டும் அவர்களை ஆரிய அனுசாரப் பள்ளத்தில் தள்ளிவிடக் கூடியதுமாகும். எனவே, அந்தப் பரம்பரைப் புரோகிதக் கூட்டத்தார் ஆற்றிவரும் பணியினை விழிப்புடன் நோக்கிவர வேண்டும் என்பதுடன், உடனுக்குடன் அவர்கள் செயலில் மறைந்து கிடக்கும் நச்சுத் தன்மையையும் வெளிப்படுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

அதனால் நாம் பழிக்கப்படுகிறோம்; பொருட்படுத்தவில்லை—போக்கினை மாற்றிக்கொள்ள ஒருப்படவில்லை. என்றும்போல் அவர்களும் பொது நோக்கும் பெறவில்லை; புது நோக்கும் கொள்ளவில்லை.

ஆனால், நாம் மட்டும் அவர்கள் விஷமச் 'செயலை மறக்க வேண்டும், மன்னித்து நடக்க வேண்டும்; என நம்மிடை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

விஞ்ஞானம் வழங்கிய அத்தனை வசதிகளையும் அவர்கள் பெற்று நல்வாழ்வு நடத்திக் கொண்டுவரும் அதே நேரத்தில் மனுவின் மடியில் படுத்துறங்கிச் சுகங்காணும் நிலையை அவர்கள் கைவிட முன்வரவில்லை. மனு முறையால் வாழ் விழந்து கிடக்கும் நாம் மட்டும், அவர்கள் செய்கை கண்டு மனம் நோகக்கூடாதாம்; அம் மனு முறையை மாய்ப்பதற்கான செயலை மேற்கொள்ளக் கூடாதாம்.

இங்குள்ள நம்மவர்க்கு மரம், மண், கல், காக்கை, கழுதை, குக்கல் அத்துணையும் இன்றும் வரங் கொடுக்கும் தெய்வங்களாக உள்ளன. நமது சலியா முயற்சியால், இத்துறையில் மக்களுக்கு இருந்துவரும் நம்பிக்கை சிறுகச் சிறுக சிதறி வருகின்றது. அதன் விளைவாக புதிய வாழ்வின் பக்கம் அவர்களில் பெரும்பான்மையினர் மெள்ள மெள்ள நகருகின்றனர். இந்த மாற்றம் நமது உழைப்பின் உருபலன். உழைப்பு பயனளிப்பது கண்டு நமது உள்ளம் பூரிக்கிறது.

மூட நம்பிக்கை மறைந்து வருவதையும், அதுவும் நமது உழைப்பால் அம்மாற்றம் ஏற்படுவது கண்டு நாம் பூரிப்புக் கொள்வதையும், கண்டு மனம் பொறாதவர்களாக, மக்களின் மத நம்பிக்கையின் உச்சியில் மூகாம் அமைத்து ஆதிக்கஞ் செலுத்தி வரும் மத ஆதிக்கக்காரர்கள் சீறுகின்றனர்; தங்கள் ஆதிக்கம் சரிகிறதே என்று ஓலமிடுகின்றனர்; மீண்டும் ஆதிக்கத்தைப் பெற செல்லரித்துப்போன புராண ஏடுகளைத் தேடுகின்றனர்; அவ்வேடுகளில் உள்ள நச்சுக் கருத்துக்களை பொது மக்களிடம் விலை கூறி விற்கின்றனர். அதற்காக வேண்டி, இனிப்புப் பண்டத்தின் மீது உட்காரும் ஈயும் எறும்பும், எந்த அளவு அப்பண்டத்தால் தங்கள் பசிப்பிணியைப் போக்கிக் கொள்ள முடியுமோ, அதே அளவில் மக்களின் மத நம்பிக்கையில் தங்கள் வயிற்றைப் பொறுத்தி வைத்துக்கொண்டுள்ள வக்கிரங்களையும் வாரியார்களையும், தங்களுடன் சேர்த்துக்கொண்டு, புரோகிதத் திருக்கூட்டம், புதிய அணியை உருவாக்கி இருக்கிறது. நிற்க,

பீமாவரத்தை அடுத்த நரசிங்கராஜபுரத்தில் இருக்கும் பார்ப்பனச் சேரியில் ஒரு ஈச்ச மரம் இருக்கிறதாம். அது காலையில் மேற்குமுகமாக மெள்ள மெள்ளத் தாழ்ந்து, நடு இரவில் மீண்டும் வழக்கம் போல் நிமிர்ந்து நிற்கிறதாம். அந்தச் செய்தி 'தினமணி'யில் கண்டபடி தருகிறோம் :—

பீமாவரம், நவம்பர் 20—இங்கிருந்து 4 மைல் தூரத்தில் உள்ள நரசிங்கராஜபுரம் அக்ரஹாரத்தில் ஒரு ஈச்சமரம் சென்ற சில தினங்களாக எல்லோருடைய கவனத்தையும் இழுத்து வருகிறது.

ஒரு கோவில் அருகில் உள்ள மேற்கூறிய மரத்தின் உயரம் 11 அடி 8 அங்குலம். மாலை 4 மணியிலிருந்து இந்த மரம் மேற் திசையில் தலை வணங்குவது போல குனிய ஆரம்பிக்கிறது. மணி செல்லச் செல்ல குனிந்துகொண்டே போகிறது. இரவு 8 மணிக்கு மரத்தின் உச்சி தரையில் பட்டுவிடுமோ என்று எண்ணும்படி ஒரேயடியாகக் குனிந்துவிடுகிறது.

இரவு 9-30 மணிக்குப் பின்னர் இந்த 'மௌன பக்தன்' தலை நிமிர ஆரம்பிக்கிறான். பிறகு எப்பொழுதும் போல நிமிர்ந்து நிற்கிறான். இரவு 12 - மணிக்கும் 1 - மணிக்குமிடையே இந்த மரத்திலிருந்து சிறந்த வாசனை வெளிப்படுகிறது. ஏராளமான ஜனங்கள் இந்த மரத்திற்கு மலர் போட்டு ஆராதனை செய்கிறார்கள்.

(சாதாரணமாக மூங்கில் ஒன்றுதான் காலையில் கிழக்கேயும் மாலையில் மேற்கேயும் சாய்ந்திருப்பது வழக்கம்.)

மக்கள் பூஜிக்கிறார்களாம்! வேம்பு, அரசு, கல்லாலம், மாமரம் போன்ற மரங்களைக் 'கண்கண்ட தெய்வமாக'க் கருதி வணங்கிவரும் சாதாரண மக்கள், தாழ்ந்து நிமிரும் ஈச்சையை எப்படி வணங்காமல் இருப்பார்கள் என எதிர்பார்ப்பது?

வெண்ணிலவைக் கண்டு அல்லி வெண்ணகையை வீசுவதும், ஞாயிறு எழக்கண்டு செந்தாமரை சிரிப்பதும் இயற்கை நியதியேயல்லாது, 'எனை ஆளும் ஈசன்' செயல், அல்லவே அல்ல! பிற பொருள் அச்செடியின் மீது மெல்ல உராய்ந்தாலும் போதும், புதுப் பெண் முகத்தை நாணிக்கொள்வது போன்றே, விரிந்திருந்த அச்செடியின் இலைகள், இமை மூடித் திறப்பதற்குள் குவிந்துவிடும். பகலெல்லாம் விரிந்துக் கிடந்தும், இரவு வந்ததும் மூடிக்கொள்ளும் இயல்புடைய இலைகளைக் கொண்ட மரங்களும் உண்டு. இதில், 'கடவுள் அற்புதத்தை'க் காணக் கிளம்புவது வடிகட்டின அறிவின்மையாகும். உண்மை தெரிந்தும் இந்த இயற்கை நியதியை 'ஆண்டவன் செயல்' என நாகூசாமல் கூறுபவர் முதல்தரமான கயவர்களாவர்.

பீமாவரம் ஈச்சையைப் போலவே வங்காளத்தில் உள்ள பரித்பூரில் 1929-ம் ஆண்டில் ஒரு ஈச்சைமரம் தாழ்ந்து நிமிர்ந்து கொண்டிருந்தது. அதை அப்பொழுதே ஆராய்ந்து காலஞ் சென்ற தாவர விஞ்ஞானப் பேராசிரியரான ஜகதீசசந்திரபோஸ், அதன் உண்மையை விளக்கியுள்ளார். அது குறித்து அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக உள்ள டி. சி. என். சிங் என்பவர், 'இந்து' இதழுக்குக் கடிதம் தீட்டியுள்ளார். அது இது :—

"நரசிங்கராஜபுரத்தில் உள்ள ஈச்சமரத்தைக் கண்டு யாரும் அஞ்சவோ, ஆச்சரியப்படவோ வேண்டியதில்லை. அது மிகப் பிரபலமானதொரு உடற்கூறு அமைப்புத்தான். 1929-ல் வங்காளத்தில் உள்ள பரித்பூர் எனும் இடத்தில் இதேமாதிரி 'குண'முடையதும், 'வணங்கும் ஈச்சு' எனப் பெயர் பெற்றதுமான மரம் ஒன்றை காலஞ்சென்ற சர். ஜே. சி. போஸ் கண்டார். அவர், 'ஈச்ச மரம் காலையிலும், மாலையிலும் தாழ்ந்து நிமிர்வதற்குக் காரணம் ஒரே நாளில் உள்ள வேறுபட்ட தட்ப வெப்ப நிலை மாற்றந்தான் என்று கூறியுள்ளார். இதுபற்றி அவர் எழுதியுள்ள "செடிகளின் வளர்ச்சியும் இயக்கமும்" எனும் புத்தகத்தில் காணலாம்"

பிர்லாவின் பேராசைத் திட்டங்கள்

இந்திய சர்க்கார் அனுமதி மறுத்துவிட்டது

இந்தியத் தொழில் அதிபர்களில் முக்கியமானவரான பிர்லாவின் இரண்டு பெரிய திட்டங்களை ஒப்புக்கொள்ள இந்திய சர்க்கார் மறுத்துவிட்டது என்று தெரிகிறது.

ரூ. 10 கோடி அளவில், தேன் இரும்புத் தொழிற்சாலைக்கான திட்டமொன்றையும், ரூ. 100 கோடி அளவில் எஃகுத் தொழிற்சாலைக்கான திட்டமொன்றையும் பிர்லா ஸ்தாபனத்தார் இந்திய சர்க்காரிடம் கொடுத்ததாயும், இத்திட்டங்களை அமுல் நடத்த லைசென்ஸ் வழங்க இந்திய சர்க்கார் மறுத்துவிட்டதாகவும் தெரிகிறது.

இத்திட்டங்களுக்கு இந்திய சர்க்காரிடம் கோரப்பட்ட உதவி சிறியதாயினும், சர்க்காரின் தொழில் கொள்கையின்படி அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பிர்லாக்கள் இந்திய சர்க்காரிடம் தந்த திட்டங்களில், துர்காபூரில் தேன் இரும்புத் தொழிற்சாலை நிறுவுவது ஒன்றாகும்.

ரூ. 10 கோடி செலவில் அமைக்கப்பட இருக்கும் இத்திட்டத்திற்கு உள்நாட்டிலேயும், வெளி நாட்டிலேயும் பொருளாதார உதவியைத் தேடவில்லையாம்.

இத்திட்டத்தை ஒட்டி, மேற்கு வங்க சர்க்கார், 'கோக் ஓவன்' திட்டமொன்றை நிறைவேற்றத் தயாராக இருந்ததாம்.

இந்திய சர்க்காரிடம், இத்திட்டத்திற்கான லைசென்சு வழங்குமாறு மட்டுமே கேட்கப்பட்டதென்றும், ஆனால், இக்கோரிக்கை மறுக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இத்திட்டத்தின்படி $2\frac{1}{2}$ லட்சம் டன் இரும்பு தயாரிக்க ஏற்பாடு செய்யப்படுமாம்.

அடுத்து, ரூ. 100 கோடி அளவில், எஃகு தொழிற்சாலை ஒன்றை அமைக்கத் திட்டம் ஒன்று தரப்பட்டதாம்.

இதன்படி ஆண்டு தோறும் 6,70,000 டன் எஃகு தயார் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டதாம்.

அமெரிக்க பாங்கிகளின் மூலமாகவும், பிரிட்டிஷ் தொழில் அதிபர்கள் மூலமாகவும், போதுமான மூலதனத்தை இந்திய சர்க்காரின் உறுதியின் பேரில் பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

பிர்லாவின் சார்பில் இத்திட்டத்தில் போடவேண்டிய ரூ. 35 கோடி மூலதனத்தில் 15 கோடியை சர்க்காரை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டதாம்.

இத்திட்டத்தில், இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு சிறிதளவே என்றாலும், இந்தத் திட்டத்திற்கும் அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஆறாண்டுகளுக்கு முன்னர், இந்திய சர்க்காரினால் வகுக்கப்பட்ட தொழில் கொள்கையின்படி இரும்பு, நிலக்கரி, விமானம், கப்பல், போக்குவரத்து ஆகிய தொழில்கள் அனைத்தும் சர்க்காரின் உரிமையாகவே இருக்குமென்றும், தேசீய நிலையில் தேவை ஏற்பட்டால்தான் இத்தொழில்களை புதிதாக ஆரம்பிக்க தனிப்பட்ட நபர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் திட்டம் இருக்கிறது.

இக்கொள்கையினின்றும் சர்க்கார் வழுவி இருப்பது உண்மை; எண்ணெய்த் தொழிற்சாலைகளை நடத்த வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு இங்கே அனுமதி கொடுக்கப்பட்டதுடன், '25 ஆண்டுகளுக்கு அவைகளைத் தேசீய மயமாக்குவது கிடையாது,' என்ற உறுதி மொழியும் அளிக்கப்பட்டது.

பிர்லாவின் சார்பில் தரப்பட்ட இரு திட்டங்களுக்கு அனுமதி தரப்பட வேண்டிய நிலையில் அவசியம் எதும் இல்லை என்று இந்திய சர்க்கார் கருதுவதால் இத்திட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

"பிர்லா பற்றிய இந்திய சர்க்காரின் இந்த முடிவினால், வெளிநாட்டிலிருந்து இந்தியாவில் வந்து தொழில் நடத்தும் தொழில் அதிபர்களின் விருப்பத்தைப் பாதிக்காது," என்று சொல்லப்படுகிறது.

திருந்தாதவர்கள்!

"அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெறாத கம்பெனி ஒன்றுக்கு இந்திய அரசாங்கத்திற்குத் தேவையான விமான சாதனங்களை விற்பதற்கான ஒப்பந்தம், எப்படிச் செய்யப்பட்டுள்ளதென, இங்கிலாந்திலிருக்கும் இந்தியத் தூதுவர் விளக்கம் தரக் கோரப்பட்டிருக்கிறார். இது, எந்த அதிகாரி இதற்கெல்லாம் பொறுப்பு என்பதைத் தெரிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு நடவடிக்கை," என்ற இத்தகவலை, மத்திய அரசாங்க, உதவி பாதுகாப்பு மந்திரி மக்கள் சபையில் அறிவித்தார்.

மரண தண்டனை விதிக்கக் கோரிக்கை!

எகிப்து முஸ்லிம் சகோதரத்துவ நிறுவனத்தின் தலைவரான ஹாசன் எல் ஹோடிபிக்கு மரண தண்டனை தர வேண்டுமென சர்க்கார் தரப்பினர் கோரியுள்ளனர் எனத் தெரிகிறது.

இவரை விசாரித்துக் கொண்டிருக்கும் ஒரு தனி நீதிமன்றம், விசாரணை முடிந்துவிட்டதாகவும், தீர்ப்பு 'பின்பு' தரப்படுமெனவும் கூறியுள்ளதாம்.

அலி நூர்தீன் என்ற பிரதம பிராசிகியூடர், வழக்கை நடத்துகையில், "எந்த ஒரு சாதாரண நீதிமன்றமும், இம்மாதிரி இரகசியமாக ஆயுதங்களைச் சேகரித்து, ஒரு இயக்கத்தை உருவாக்கி, இயங்கி வரும் ஒரு அரசாங்கத்தைக் கவிழ்க்கும் வேலையில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனையையே நிச்சயமாகத் தரும்; முஸ்லிம் சகோதரத்துவ கழகத்தாருக்குச் சொந்தமான ஏராளமான ஆயுதங்கள் சூயஸ் கால்வாய் பகுதிகளிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

"முஸ்லிம் சகோதரத்துவ நிறுவனத்தார், அந்த ஆயுதங்களை அங்குள்ள பிரிட்டிஷ் துருப்புகள் மீது ஏன் உபயோகிக்கவில்லை? ஏனென்றால், அவைகளை, அவர்கள், அரசாங்கத்திற்கு எதிராக உபயோகிக்கத் திட்டமிட்டிருந்தனர்," என்று வாதாடியிருக்கிறார்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள ஹோடிபி, 'தான் குற்றவாளியல்ல,' எனக் கூறினாராம்.

"பாகிஸ்தான் ஒரே அங்கமாக இணைய வேண்டும்"

மே. பாகிஸ்தான் இணைப்புக்குள்ள எதிர்ப்பை அலட்சியம் செய்யாதீர்

'டான்' இதழ் தரும் எச்சரிக்கை

"மாநில எல்லைக்கோடுகளை நிர்வாகச் சட்டத்தினுல் அழித்து விட்டு, பஞ்சாப், சிந்து, பதான், பலுசிஸ்தான் ஆகிய பெயர்களை ஒதுக்கிவிடுவதினுலேயே நீண்ட நாட்களாக நிலவிவருகிற மனேபாவம் மாறிவிட முடியாது,"

என்று மேற்கு பாகிஸ்தான் இணைப்புப் பற்றி எழுதுகையில் கராச்சி இதழான 'டான்' குறிப்பிட்டுள்ளது.

"ஒரே அங்கமாக மேற்கு பாகிஸ்தானை இணைப்பதற்கு எழுந்துள்ள எதிர்ப்பை அலட்சியப் படுத்துவதினுல் பலன் எதுமில்லை; எதிர்ப்பவர்கள் எல்லோரும் நேர்மையான சிந்தனையாளர்கள் அல்ல எனக் கொள்ள முடியாது; தேவைப்படுவதெல்லாம், மக்களிடையே, இணைப்பை ஏற்றுக்கொள்கிற மனமாற்றத்திற்கான காரியங்களில் ஈடுபடுவதுதான்"

என்றும் அந்த பத்திரிகை கருத்தறிவித்துள்ளது

"பாகிஸ்தானுக்கு, மேற்கு, கிழக்கு என இரண்டு கூறுகள் இருப்பதைக் காட்டிலும், ஒரே கூருக, பாகிஸ்தான் இணைவது நலம்"

என்று அந்த இதழ், அண்மையில் வெளியிட்டிருந்த கருத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மேற்கு பாகிஸ்தான் இணைப்பு

பக்தூனியர் எதிர்ப்பு

மேற்கு பாகிஸ்தானிலிருக்கும் மாநிலங்களையும், சமஸ்தானங்களையும் ஒரே அங்கமாக இணைப்பதற்கு பக்தூனிஸ்தான் இயக்கம் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

"மேற்கு பாகிஸ்தான் ஒன்ருக இணைக்கப்படுமானுல், பஞ்சாபி முஸ்லிம்கள் மேற்கு பாகிஸ்தானில் பெரும்பான்மையினராக இருப்பதினுல், அவர்கள், பட்டாணியர்கள், சிந்து முஸ்லிம்கள் ஆகியோர்மீது ஆதிக்கம் செலுத்துவார்கள்; பக்தூனியர் அத்தகைய ஒரு நிலையை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; ஒன்ருக இணைக்கப்படும் மேற்கு பாகிஸ்தான் அங்கத்தில் வாழச் சம்மதியார்கள்; இந்த இணைப்புத் திட்டத்தை பலம் கொண்ட மட்டும் எதிர்ப்பார்கள்,"

என்று, பக்தூனிஸ்தான் இயக்கத்தின் பொதுச் செயலாளரான கான் காஜி கபூலி தெரிவித்திருக்கிருர்.

அவர் மேலும், "பக்தூனியர்களின் பக்தூனிஸ்தான் லட்சியத்தை நசுக்குவதற்காகவே, மேற்கு பாகிஸ்தான் இணைப்புத் திட்டம் தயாரிக்கப்படுகிறது," என்றும் கூறினுர்.

இந்தியாவின் தாதுப் பொருள்

112 கோடி ரூபாய் பெறுமானமுள்ள உற்பத்தி

பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட விவரம்

இந்தியாவில் 1953-ல் உற்பத்தி செய்யப்பட்ட தாதுப் பொருள்களின் சுரங்க வாயில் பெறுமானம் மொத்தம் 112 கோடி ரூபாயாகும்.

1953-ல் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு தாதுப் பொருள்களின் பெறுமானம் வருமாறு:—

நிலக்கரி—ரூ. 52·7 கோடி; மாங்கனீஸ் கனி—ரூ. 29·4 கோடி; ஜிப்சம்—ரூ. 28 இலட்சம்; குரோமைட்—ரூ. 25 இலட்சம்; பாக்சைட்—ரூ. 7·88 இலட்சம்.

1953-ல், பல்வேறு நிலையங்கள் நிலக்கரியை உபயோகித்துக் கொண்ட விவரங்களாவன:—

இரயில்வேக்கள் 1,04,25,007 டன்;

இரும்பு—எஃகு, பித்தளை உற்பத்திச்சாலைகள்—15,27,550 டன்;

நீராவி, மின்சார நிறுவனங்கள் (வாயு உற்பத்திக் கம்பெனிகள் உட்பட)—27,92,305 டன்;

ஜவுளி உற்பத்தி—18,09,958 டன்;

செங்கல், ஓடு, மண்பாண்ட உற்பத்தி—16,65,959 டன்கள்.

1953-ல் மொத்தம் 7,37,22,550 ரூபாய் பெறுமானமுள்ள 20,52,971 டன் நிலக்கரியும், 'கோக்' கரியும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நிலக்கரி மிக அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டது பாகிஸ்தானுக்காகும்—மொத்தம் 7,56,299 டன் அந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டது; அதற்கு அடுத்தபடியாக, ஜப்பானுக்கு 4,28,363 டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. மற்றும் ஏடன், ஆஸ்திரேலியா, பர்மா, இலங்கை, எகிப்து, ஹாங்காங், இந்தோனேஷியா, கொரியா, சிங்கப்பூர், தாங்கனீகா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் இந்திய நிலக்கரி அனுப்பப்பட்டது.

1953-ல் இந்தியாவிலிருந்து மாங்கனீஸ் மிக அதிகமாக வாங்கிய நாடு அமெரிக்காவாகும்; மொத்தம் ரூ. 17,37,76,295 பெறுமானமுள்ள மாங்கனீஸ் கனி அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

இந்தியாவிலிருந்து மாங்கனீஸ் இறக்குமதி செய்த மற்ற நாடுகள்;

பிரிட்டன்: ரூ. 2,72,96,494;

மேற்கு ஜெர்மனி ரூ. 1,38,81,783;

ஜப்பான் ரூ. 1,37,83,154;

மற்றும் ஹாங்காங், கானடா, ஸ்வீடன், நார்வே, டென்மார்க், நெதர்லாண்ட்ஸ், பெல்ஜியம், பிரான்ஸ், ஸ்பெயின், இதாலி, டிரீஸ்டி சுதந்திரப் பிரதேசம், ஆஸ்திரியா, யுகோஸ்லாவியா, பர்மா, பிலிப்பைன்ஸ் ஆகியவையாகும்.

இந்தியாவில் 1953-ல் உற்பத்தி செய்யப்பட்ட உலோகங்களின் மொத்த பெறுமானம், ரூ. 55,25,-53,637 ஆகும். இதில் முதலிடம் பெற்றிருப்பது எஃகு—மொத்த பெறுமானம் ரூ. 41,60,89,700. உற்பத்தி மிகக் குறைவாக இருந்தது—வெள்ளி மொத்த பெறுமானம் 64,418 ரூபாய்.

1953-ல் தாதுப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 5,92,197 ஆகும். 1952-ல் மொத்தம் 5,83,395 தொழிலாளர் வேலை பார்த்தனர்.

இந்திய மொழிகளில் தமிழ்க் கதைகள்

மொழி பெயர்க்க முடிவு!

அண்ணுமலைநகர், நவ. 25—

இலக்கியப் பேரவையின் தமிழ் ஆலோசனைக் குழுவினர், 12 தமிழ்க் கதைகளை மற்ற இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கத் தீர்மானித்திருக்கின்றனர்.

கு. ப. ராசகோபாலனின் 'காணுமலே காதல்'; புதுமைபித்தனின் 'வழி'; கல்கியின் 'விஷ மந்திரம்'; நாரண—துரைக்கண்ணனின் 'வேதாந்த கேசரி'; மாயாவியின் 'பனித்திரை'; டி. கே. சீனிவாசனின் 'துன்பக் கதை'; அகிலனின் 'இதயச் சிறையில்'; சுத்தானந்த பாரதியின் 'கடிகாரச் சங்கிலி'; விந்தனின் 'முல்லைக் கொடியாள்'; லக்ஷ்மியின் 'வில் வண்டி'; ப. சுப்பிரமணியத்தின் 'ஜீவச் சிலை'; கணையாழியின் 'நொண்டிக் குருவி' ஆகியவைகளே, மொழி பெயர்க்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள சிறு கதைகளாகும்.

பிரிட்டனின் இரயில்வே தொழில்

எதிர்காலம் நம்பிக்கையற்றுள்ளதாம்!

பிரிட்டிஷ் ரயில்வே தொழிற்சாலைகளின் எதிர்காலம் நம்பிக்கை தருவதாக இல்லை என்றும், உலக மார்க்கெட்டுகளில் புதிய 'ஆர்டர்'கள் எதும் கிடைக்காமற் போனுல் இத்தொழிலில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமென்றும் சொல்லப்படுகிறது.

சென்ற பல ஆண்டுகளாக வெளிநாட்டு ஏற்றுமதியின் மூலமே இத்தொழில் நிலைபெற்று இருந்ததென்றும், ஆனுல், இப்போது ஜெர்மனியும், ஜப்பானும் இத்தொழிலில் போட்டியிட முன் வந்ததால், பிரிட்டிஷ் தொழிற்சாலைகளுக்கு 'மார்க்கெட்' குறைந்துபோயிற்று என்றும் தெரிகிறது.

சமீபத்தில், இந்தியாவிலிருந்து 400 எஞ்சின்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டபோது, ஜெர்மனி 3,500 பவுன் மீதம் செய்துதர முன்வந்ததென்றும், பிரிட்டிஷ் கம்பெனிகளின் விலைகளைக் காட்டிலும் ஜெர்மனியின் விலை குறைவாக இருந்ததால் இந்த வேலை பிரிட்டிஷ் கம்பெனிகளுக்குக் கிடைக்காது போயிற்றென்றும் தெரிகிறது.

கொழும்புத் திட்டப்படி 120 எஞ்சின்களுக்கான ஆர்டர்கள் கனடாவுக்குச் சென்றதாம். இந்த ஆர்டரின்படி 'ஜி' எஞ்சின்களின் விலை, கனடாவில், பிரிட்டனைப் போல் இரண்டு மடங்காக உள்ளதாம். ஆனுல், விலை மலிவாக இருந்தபோதிலும், கொழும்புத் திட்டத்தில், 'பிரிட்டனின் பங்கு தொழில் நுணுக்க உதவி மட்டுமே,' என்றிருப்பதால், இந்த 'ஆர்டரும்' பிரிட்டிஷ் தொழிற்சாலைகளுக்கு கிடைக்கவில்லை என்று தெரிகிறது.

1948-ம் ஆண்டில், பிரிட்டிஷ் ரயில்வேக்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டது; ஆகவே, சர்க்கார் ரயில்வேயில் ஏற்படும் பழுதுகள் அனைத்தும் சர்க்கார் தொழிற்சாலையிலேயே செய்யப்படுவதால், தனிப்பட்ட கம்பெனிகளுக்கு இதனுல் எதும் தொழில் கிடைப்பதில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நெருக்கடியான நிலையிலிருந்து, தனிப்பட்ட முதலாளிகள் தங்கள் தொழிலைக் காப்பாற்றிக்கொள்ள எல்லாத் துறைகளிலும் பாடுபடுகின்றனர் என்று தெரிகிறது.

இப்போது ருஷ்யாவிலிருந்தும், சீனுவிலிருந்தும் பெரிய ஆர்டர்கள் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நெல் சாகுபடியில் புரட்சி

★

இயந்திரசாதன வசதிகளால், நெல்சாகுபடியில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்ய முடியுமென்பதை சர்வதேச அரிசி உற்பத்தி மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் தெரிந்துகொண்டார்கள்.

அபிவிருத்திகள் செய்யப்பட்ட 'பெர்கூஸன் டிராக்டர்,' 20 மாடுகளுக்கு ஈடாக உழைக்கிறது என்றும், தமிழ் நாட்டில் இந்த டிராக்டரை உபயோகித்த இடங்களில் 30 சதவிகிதம் உற்பத்தி பெருகியிருப்பதாகவும் கூறப்பட்டது.

அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த டிராக்டரின் விலை 9,400 ரூபாய்கள்தான். இந்த டிராக்டரால், 200 ஏகராவை ரூ. 1,397 செலவில் பண்படுத்த முடியும். இதே வேலைக்கு 20 மாடுகளால் நேரிடும் செலவு ரூ. 2,100.

இந்தியாவின் உணவு உற்பத்தி

இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டப்படி, 1956 முடிவில், இந்தியாவின் உணவு உற்பத்தி 76,00,000 டன் இருக்க வேண்டும்; ஆனுல், இப்பொழுதே அதன் அளவு 1,14,00,000 டன் ஆக இருக்கின்றது.

நீர்ப்பாசனமும், விளைச்சலும் உள்ள நில அளவும் தற்பொழுது இந்தியாவில் அதிகரித்துள்ளது. பருத்தி, எரு, மின்சார உற்பத்தியும் அதிகரித்துள்ளன.

தேவையான சட்டமியற்றுவதற்காக மாநில அரசாங்கங்களிடமிருந்து இந்திய மத்திய அரசாங்கம் தேவையான புள்ளி விவரங்களை சேகரித்து வருகிறது.

ஆயுதச் சட்டத் திருத்த மசோதா

தனிச் சலுகை தருவதற்கு சென்னை சர்க்கார் எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 25—

மாநில சட்டசபை அங்கத்தினர்கள் மக்கள் சபை உறுப்பினர்கள், கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகள் முதலியோர் ஆயுதம் வைத்துக் கொள்வதற்கு வகையளிக்கும் முறையில், ஆயுதம் வைத்திருப்பதற்கான கட்டுப்பாடு விதிகளைத் தளர்த்துவது பற்றி சென்ற வருடம் மக்கள்சபையில்பிரரேபிக்கப்பட்ட ஆயுதச் சட்டத் திருத்த மசோதாவை சென்னை சர்க்கார் எதிர்த்துள்ளதெனத் தெரிகிறது.

இன்னும் 5 மாநிலங்களும் மசோதாவின் பெரும்பாலான பிரிவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிகிறது.

மேற்கண்டவர்களுக்கு ஆயுதம் வைத்துக்கொள்ள அனுமதிப்பதின் மூலம், தனிச் சலுகை பெற்ற அங்கம் என்று சமுதாயத்தில் உருவாகுமென்றும், ஏற்கனவே உள்ள தனிச் சலுகைகளைக் குறைத்து சமத்துவம் ஏற்படுத்த வேண்டுமென்ற உணர்ச்சி நாட்டில் வெகுவாக எழுந்துள்ளது என்றும் இந்த மாநிலங்கள் கருத்தறிவித்திருக்கின்றனவாம்.

மூன்று சக்கர மோட்டார்

மூன்று சக்கரங்களையுள்ள சிறிய மோட்டார் காருக்கு இப்போது 'மௌஸ்' ஏற்பட்டிருக்கிறது. இதுவரை சுமார் 10,000 கார்கள் விற்பனையாகியுள்ளன. இப்போது பலவித அபிவிருத்திகளுடன் வாரத்திற்கு 100 கார்கள் உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு காலனுக்கு 75 மைல் ஓடுகிறது.

நாகர்களின் தனி நாடு கோரிக்கை

அடக்க தனி அமைச்சர் நியமிக்கப்படுவார்?

இந்திய சர்க்கார் மலைப் பிரதேச நிர்வாகத்திற்கென்று தனி அமைச்சர் ஒருவரை நியமிப்பது பற்றி தீவிரமாக ஆலோசிக்கிறதாம்.

இதுபற்றி ஆலோசனை செய்ய வட கிழக்கு ஏஜென்சி பிரதேச அதிகாரி கே. ஐ. மேத்தாவை புதுடில்லிக்கு வருமாறு இந்திய சர்க்கார் அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

நாகர்களின் தனி நாடு கோரிக்கை வலுப்பதைக் கண்ட இந்திய சர்க்கார், அவர்களின் தனி நாடு கோரிக்கையை அடக்க ஆவன செய்வது அவசியம் என்று கருதுகிறதாம்.

தனியாக அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டால், இப்பிரச்சினையைத் தீர்ப்பது சுலபம் என்று இந்திய சர்க்கார் நம்புகிறதாம். பாராளுமன்றத்தில் உள்ள அசாம் உறுப்பினர் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

பெண்ணை வெறுக்கும் சிறுத்தை

பீஜப்பூர் வட்டத்தில் திரியும் ஆட்கொல்லும் சிறுத்தையொன்று மிக விசித்திரமான தாக்குதலை நடத்தி பயமூட்டி வருகிறதாம்.

ஆட்களைக் கொல்லும் இச் சிறுத்தை, ஆண்களையோ, குழந்தைகளையோ ஒன்றும் செய்வதில்லையாம்; ஆனுல் பெண்களைக் கண்டால் பாய்ந்து தாக்கி உயிர் குடிக்கிறதாம்!

இதுவரை இச் சிறுத்தைக்குப் பலியானவர்கள் 15 பெண்கள் என்று சொல்லப்படுகிறது.

சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்பவர்கள், இச்சிறுத்தையின் 'பெண்ணை வெறுக்கும்' குணம் கண்டு ஆச்சரியப்படுவதுடன், தங்கள் வீட்டிலும் தாக்குமோ என்ற பீதியும், கலக்கமும் உடையவர்களாயுமிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

போலி மருந்து தயாரித்தவர்

2 ஆண்டு கடுங்காவல் தண்டனை பெற்ருர்

பத்தாவது முறையாக சிறைவாசம்

பம்பாய் நகரில் போலி கொய்னு தயாரித்து ஹாலந்து நாட்டிலிருந்து கிடைத்த கொய்னு எனக் கூறி விற்க முயன்றதாக பொக்காதாஸ் தெஜூமல் கதாரியா என்பவருக்கு பம்பாய் நீதிபதி இரண்டு வருட கடுங்காவல் தண்டனை விதித்துள்ளதாகத் தெரிகிறது.

வேறு ஒரு கம்பெனியின் 'டிரேட் மார்க்'கைப்போல போலி முத்திரை தயாரிப்பதற்கான அச்சடிக்கும் 'பிளாக்' ஒன்றும் இந்த நபரிடம் இருந்ததாகக் கூறப்பட்டது. நீதி மன்றத்தில் இதுமாதிரி இவர் போலி மருந்துகள் தயார் செய்த குற்றத்திற்கு முன்பு ஒன்பது முறைகள் தண்டிக்கப்பட்டவராம். இப்போது பத்தாவது முறையாகத் தண்டிக்கப்பட்டிருக்கிருர் எனத் தெரிகிறது.

தனது போலி மருந்துகளை நிரப்பி, போலி லேபில்களையும் ஒட்டி மக்களை ஏமாற்றுவதுடன் மக்களின் தேகநலத்திற்கும் பெரும் ஊறு செய்கிற குற்றம் புரிந்திருப்பதால் தண்டனை கடுமையாகத் தரப்படவேண்டுமென சர்க்கார் கோரியதாம்.

இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை தரப்பட்டிருக்கிறது.

காச நோய் காரணமாக வேலையிழந்தோர்

"ரயில்வேக்களில் ஊழியம் செய்து காச நோய் காரணமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் டாக்டர்களின் அத்தாட்சியின் மீது மீண்டும் வேலைக்குச் சேரத் தகுதியுடையவர்களாகின்றனர்," என்று இந்தியப் பாராளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் அமைச்சர் ஓ. வி. அளகேசன் கூறினுர்.

ஜப்பான் பிரதமர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

செவ்வாயன்று பாராளுமன்றம் விவாதிக்கும்

ஜப்பனின் ஆளும் கட்சியானா லிபரல் கட்சியின் நிர்வாகக் குழு பிரதமர் யோஷிடாவின் தலைமையை ஊர்ஜிதம் செய்து அவரை பதவியில் நீடிக்க அனுமதித்திருக்கிறது.

இப்போது உதவிப் பிரதமராக இருக்கும் ஒகாடாவை, கட்சியின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறது.

சர்க்காருக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் எதிர்க் கட்சியில் 123 பேர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சர்க்கார் கட்சிக்கு 186 உறுப்பினர்கள் இருக்கிறார்களாம்; ஆனால், இடதுசாரிக் கட்சியினர் 133 பேர் புதிய எதிர்க் கட்சியுடன் சேர்ந்து யோஷிடாவுக்கு எதிராக வாக்களிக்கப்போவதாக கூறியுள்ளார்கள்.

அடுத்த செவ்வாயன்று யோஷிடாவின் மீதுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஜப்பான் பாராளுமன்றம் விவாதிக்க இருக்கிறது.

இதற்கிடையில், ஜப்பான் முழுமையும் கூலி உயர்வு கோரி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள்.

சர்க்காரின் இரயில்வேயில் 200 வண்டிகள் இந்த வேலை நிறுத்தம் காரணமாக ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

தபால் நிலையங்களில் 12,000 தந்திகள் அப்படியே இருக்கின்றன என்று தெரிகிறது.

ஐ. நா. பொதுச் சபையின் 500-வது கூட்டம்

புதிய நம்பிக்கை ஒளியைத் தருமென சபைத் தலைவர் குறிப்பு

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 500-வது கூட்டம் நவ. 23-ல் நடைபெற்றது.

சபைத் தலைவரான டாக்டர் வான் கிளெபன்ஸ் பேசுகையில், "உலக நிறுவனம் ஒன்றின் 500-வது கூட்டம் என்பது, குறிப்பிடத்தகுந்ததாகும். சபைக் கூட்டத்தின் எண்ணிக்கை 500 ஆகிறது என்பது நாம் வெகு நீண்ட தூரம் பயணம் செய்திருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. அது நமக்கு புதிய நம்பிக்கையைத் தருகிறது.

"எதிர்காலத்தில் எனக்குப் பின் வருபவர்கள், பொதுச் சபையின் ஆயிரமாவது கூட்டத்தைக் கூட்டுவதின் மூலம், ஐ. நா. சாசனத்தின் நோக்கங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றி வைக்கும் வகையில், ஐ. நா. சபை தொடர்ந்து பணியாற்றி வருகிறது என்பதை எடுத்துக் காட்டுவார்கள் என நம்புகிறேன்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தென் ஆப்பிரிக்காவில் 'இரும்புத் திரை'

ஐ. நா.—வில் சிரியப் பிரதிநிதி குற்றச்சாட்டு

"தென் ஆப்பிரிக்காவில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள இயலாது 'இரும்புத் திரை' போடப்பட்டுள்ளது;

"இனப் பிரச்சினைகள், நிறபேதக் கொடுமைகள் முதலியனவற்றை ஆராயச் செல்லும் ஆய்வுக் குழுவினர்கள் அனுமதிக்கப்படுவதில்லை; தனிப்பட்ட முறையிலும் கூடச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை;

"மேலும், பத்திரிகைகள் தணிக்கைக்குப் பின்தான் வெளிவருகின்றன; வேலை செய்யச் சொல்லி நிர்ப்பந்திக்கும் கொடுமையும் நிலவுகிறது;"

என்று ஐ. நா. சபையில் புகார் செய்யப்பட்டிருக்கிறதாம்.

சிரிய நாட்டுப் பிரதிநிதி பேசுகையில், "இரும்புத் திரை" போடப்பட்டுள்ளது; கதவுகள் மூடப்பட்டுள்ளன; நாம் எவ்வளவு தான் முயற்சித்தாலும் திறக்க முடியவில்லை; கதவுகள் மூடியேயிருக்கின்றன; என்னைப் பொறுத்தவரையில், தென்னாப்பிரிக்காவில் அப்படி ஒரு நிலை நிலவுவது மிக துரதிருஷ்டமானதாகும்," என்று கூறியிருக்கிறார்.

மலபார் மாவட்டக் கழகத் தலைவர்

பாஸ்கர பணிக்கர் என்ற கம்யூனிஸ்டு தேர்வு

மலபார் மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவராக கம்யூனிஸ்டு அபேட்சகர் திரு. வி. டி. பாஸ்கர பணிக்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார் எனத் தெரிகிறது.

இவருக்கு 23 ஓட்டுகளும், இவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் பத்மநாப வர்ம ராஜாவுக்கு 14 ஓட்டுகளும் கிடைத்தன.

8 முஸ்லிம் லீக் அங்கத்தினர்களும், ஒரு மக்கள் சோஷலிஸ்டு உறுப்பினரும் நடுநிலைமை வகித்தனர் எனத் தெரிகிறது.

தலைவர் தேர்தலில் மூவர் போட்டியிட்டனர்.

முதல் வாக்கெடுப்பில் முஸ்லிம் லீக் அபேட்சகர் கே. மொய்தீன் குட்டிஹாஜி தோல்வி கண்டார். அவருக்கு 7 வாக்குகளும், பணிக்கருக்கு 23 வாக்குகளும் பதிவாயின.

பிறகு பணிக்கருக்கும், ராஜாவுக்கும் போட்டி நடந்தது; பணிக்கர் 23 வாக்குகளும், ராஜா 14 வாக்குகளும் பெற்றனர். முடிவின் படி திரு. பணிக்கர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாரபட்சம் காட்டவில்லை?

பர்மிய நிலவுடைமைக் கொள்கை: மக்கள் சபையில் தகவல்

"பர்மாவில் நிலங்களை சர்க்காரே மேற்கொள்ளும் கொள்கை அமுலில் இருக்கிறது. நிலங்களை எடுத்துக் கொள்வதில் இந்தியர்களிடத்தில் பர்மிய சர்க்கார் பாரபட்சமாகநடந்து கொள்ளவில்லை," என்று வெளி நாட்டிலாகா துணை மந்திரி ஏ. கே. சந்தா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

பர்மாவில் சுமார் 20 லட்சம் ஏக்கர் நிலம் இந்தியருக்குச் சொந்தமானவை. இவற்றில் சுமார் 1¼ லட்சம் ஏகர் நிலத்தை ஏற்கனவே சர்க்கார் எடுத்துக் கொண்டது.

எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தின் மதிப்பு சுமார் 7 கோடி ரூபாய் என்று இந்தியர்கள் கூறுகின்றனர்; ஆனால், அவர்களுக்கு பர்மிய அரசாங்கம் ரூ. ஒரு கோடி மட்டுமே நஷ்டஈடாகத் தரப் போகிறது என்ற தகவலையும் அவர் தந்திருந்தார்.

இலங்கை இந்தியத் தூதுவர்

சக்ரவர்த்தியின் பெயர் ஆலோசிக்கப்படுகிறதாம்!

இலங்கையின் அடுத்த இந்திய தூதுவர் பதவிக்கு பி. என். சக்ரவர்த்தியின் பெயர் ஆலோசனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பி. என். சக்ரவர்த்தி, இப்போது லண்டனில் தற்காலிக இந்திய ஹைகமிஷனராக இருக்கிறார்.

பதவியிலிருந்து விலகிய தேசாய் பாகிஸ்தான் அல்லது ரோமில் தூதுவராக நியமிக்கப்படலாம் என்று சொல்லப்படுகிறது.

கழகக் கூட்டம்

★

ஓமலூர்

சனி சந்தை மைதானத்தில்

(ஓமலூர் பஸ் ஸ்டாண்டு அருகில்)

29—11—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். பி. சுப்ரமணியம்,

பேசுவோர்:

சுரதா

சிற்றுளி - சுப்பிரமணியம்

சொற் பயிற்சிக் கூட்டம்

28-11-54 காலை 10 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி.மு.க. பணிமனையில், தோழர் சி. குப்புசாமி தலைமையில் 'மதம் அவசியமா?' என்னும் தலைப்பில் தோழர்கள் பி. எம். மதியழகன், எம். இராசு மற்றும் பலர் பேசுவர்.

திருவள்ளுவர் இளைஞர் கழகம்

28-11-54 காலை 10 மணிக்கு, சென்னை, மண்ணடி, புதுத் தெரு, எண் 94-95, இராசமன்னார் பாடசாலையில் நடைபெறும் திருக்குறள் வகுப்பில், தோழர் சி. முருகேசனார் காமத்துப்பாலில் 'புணர்ச்சி மகிழ்தல்' என்ற அதிகாரத்தின் பின் ஐந்து பாக்களை விளக்கிப் பேசுவார்.

நகர இளைஞர் கழகம்

28-11-54 காலை 10 மணிக்கு, சென்னை, கூவம், மாணிக்கச் செட்டித் தெரு,மேற்படி கழகக் கட்டிடத்தில் நடைபெறும் வ. உ. சி. நினைவு நாள் கூட்டத்தில் தோழர் என். எஸ். இராஜன் பேசுவார்.

குளித்தலை கலைமகள் கழக இரண்டாவது ஆண்டு விழா

28-11-54 மாலை 5-30 மணிக்கு, மேற்படி கழகக் கட்டிடத்தில், தோழர் இரம்போலா மாஸ்கரனுஸ் தலைமையில் நடைபெறும். தோழர் இரத்தின சபாபதி பேசுவார். கவிமணி, வ. உ. சி. படத் திறப்பும், பாலம், லலிதா குழுவினரின் இசை விருந்தும் நடைபெறும்.

மணவிலக்கு மசோதா

பொறுக்குக் குழுவின் சிபாரிசுகள்

மண வயது உயரக் கூடும்

இந்து திருமண மணவிலக்கு மசோதா மீது மக்கள் சபையின் கூட்டுப் பொறுக்குக் குழு, சிலபல முக்கியமான ஆலோசனைகளையும் சிபாரிசுகளையும் கூறியுள்ளது.

பெண்களின் திருமண வயதை 15-லிருந்து 16 ஆகவும், ஆண்களின் திருமண வயதை 18-லிருந்து 21 வயது ஆகவும் உயர்த்தவேண்டுமென்பது குழு கூறியுள்ள முக்கியமான மாறுதலாகும்.

கூட்டுப் பொறுக்குக் குழுவின் அறிக்கையை ராஜ்ய சபையில் குழு அங்கத்தினரான பி. வி. கானே சமர்ப்பித்தார். மக்கள் சபையிலும் அறிக்கையின் நகல் விவாதத்திற்கு வைக்கப்பட்டது.

மண விலக்கு ஏற்பட்டால், சொந்த வருமானமில்லாத கணவனுக்கு பணக்கார மனைவி ஜீவனாம்சம் தரவேண்டுமென்பது குழுவின் இன்னுமொரு முக்கியமான சிபாரிசாகும்.

முதல் மசோதாவின்படி, மனைவிக்குக் கணவன்தான் ஜீவனாம்சம் தரவேண்டுமென்றிருந்தது.

மற்றும், விசேட திருமணச் சட்டத்தின் அடிப்படையில் செல்லுபடியாகாதென்று அறிவிக்கப்பட்ட திருமணத்தால் பிறந்த குழந்தைகளின் வாரிசை நிர்ணயிப்பது, சில திருமண நிபந்தனைகளை மீறுவதற்காகத் தண்டனை விதிப்பது போன்றவை குழுவினர் செய்துள்ள இதர மாறுதல்களில் சிலவாம்.

மொத்தம் பொறுக்குக் குழுவில் இருக்கும் 45 உறுப்பினர்களில் 17 பேர் தங்களின் ஆட்சேபனைக் குறிப்புகளைச் சேர்த்துள்ளனர் எனத் தெரிகின்றது.

மேற்கு நியூ கினியா

மேற்கு நியூகினியாவின் விடுதலை பற்றி இந்தோனேஷியாவிற்கும், நெதர்லாந்து நாட்டிற்குமிடையே இருந்து வரும் தகராறில், 'மேற்கு நியூகினியா எங்களுக்கே சொந்தம்' என்று கூறும் இந்தோனேஷியாவின் கோரிக்கைக்கு தனது முழு ஆதரவையும் தருவதாக இந்தியா வாக்களித்துள்ளதாகத் தெரிகிறது.

ஆனால், பிரிட்டனும், ஆஸ்திரேலியாவும் இந்தோனேஷியாவின் கோரிக்கையை எதிர்க்கிறது.

தோட்டத் தொழிலாளர் மீது துப்பாக்கிப்பிரயோகம்

பலருக்குக் காயம்

இலங்கையில் சம்பவம்

கொழும்பு, நவ. 26—

இலங்கை தோட்டத் தொழிலாளர் மீது நேற்று துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதினால் 27-பேருக்குக் காயமேற்பட்டதாகவும், அவர்களில் மூவர் நிலை கவலைக்கிடமாயிருப்பதாகவும் செய்தி வந்துள்ளது.

காயம்பட்டவர்களில் இருவர் பெண்களாம்.

பதுளைக்கருகில் உள்ள பஸாரா எனுமிடத்திலிருக்கும் 'தாம்னெரியா எஸ்டேட்' தொழிலாளர் மீது தான் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றுள்ளது.

காயம்பட்டவர்கள், பஸாரா மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மீனாட்சி, வள்ளியம்மாள், ஆறுமுகம், பழனிவேலு ஆகிய நால்வரிடமும் பதுளை நீதிபதி மரண வாக்கு மூலம் பெற்றுக்கொண்டிருக்கிறாராம்.

'எஸ்டேட்' அதிகாரிக்கும் - தொழிலாளர்களுக்கும் இடையே ஏதோ தகராறு ஏற்பட்டதாம். குலாம் நூர் என்ற ஆப்கானிய காவலாளி தன் துப்பாக்கியினால் இருமுறை சுட்டதாகவும், அதனால் 27 பேர் காயமடைந்தனர் எனவும் தெரிகிறது.

குலாம் நூர், போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாயும், மேலும் கலவரம் ஏற்படாவண்ணம் போலீசார் இடத்தை காவல் புரிந்து வருவதாயும் செய்திகள் கூறுகின்றன.

ஒரு இலாகா ஒழிக்கப்படுகிறது!

இந்தியப் பேரரசின் ராஜ்யங்களுக்கான மந்திரி சபை இலாகா ஒழிக்கப்படலாம் என்றும், அது பற்றி சர்க்கார் ஆலோசித்து வருவதாகவும் உள்நாட்டு மந்திரி கட்ஜு, கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், மக்கள் சபையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதுவும் 'இந்தி'யாகிறது!

வருகிற ஜனவரியில் நடைபெறவிருக்கும் 'குடியரசு தினக்' கொண்டாட்டத்தின்போது நிகழும் இராணுவ அணிவகுப்பின் உத்திரவுகள் எல்லாம், இந்தி மொழியிலேயே தரப்படும் என்று தெரிகிறது.

இராணுவ உத்திரவுகள் ஆங்கிலத்தில் தரப்பட்டுவந்தன.

இத்தகவல் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்கு பதிலாகத் தரப்பட்டுள்ளது.

பதிலைத் தந்த உதவிப் பாதுகாப்பு மந்திரி, 'நியமிக்கப்பட்ட ஒரு குழு, இந்தி மொழியில் இராணுவ உத்திரவுகளுக்கு வார்த்தைகளைச் சேர்த்து, கோர்த்துத் தந்துள்ளது. இவற்றின் உபயோகம் குறித்து இராணுவ அதிகாரிகள் பரிசீலித்த பின் இவை அமுலுக்கு வரும்" என்றார்.

பொதுவுடைமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் மனதைப் புண்படுத்தும் வகையில் கம்யூனிஸ்டு கட்சியினர் நடந்துகொள்ளச் செய்யக் கூடாது; விசுவாசத்துடன் தாய்நாட்டிற்குப் பணிபுரியும் பலரை, அரசியல் சந்தேகங்களுக்கு ஆளாக்குவது ஆபத்தானது; தீங்கு பயப்பது," என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளதை, ஜெயசூரியா அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உயர் நீதிமன்ற ஊழியர்கள்

நடத்தை விதிகள் பற்றிய புதிய சட்டம்

இந்திய அரசியல் சட்டம் 229 (2) பிரிவின்படி தமக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைக்கொண்டு சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, சென்னை உயர் நீதிமன்றம், மற்றும் அதை ஒட்டிய அலுவலகங்களில் பணிபுரிபவர்களின் நடத்தை விதிகள் பற்றிய புதிய சட்டங்களைப் பிறப்பித்துள்ளார் எனத் தெரிகிறது.

இந்தப் புதிய சட்டத் தொகுப்பு தேசீயப் பாதுகாப்பை காத்துக் கொள்வதற்காகவே பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

இந்த விதிகளின்படி, யாராவது ஒரு சர்க்கார் ஊழியர் சர்க்காரைக் கவிழ்க்கிற வேலைகளில் ஈடுபட்டதாகவோ, அன்றி அத்தகு செயல்களில் ஈடுபடுபவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார் எனவோ சந்தேகிக்கப்பட்டாலும், அவரை, கட்டாயமாக ஓய்வு பெற்றுக்கொண்டு வேலையிலிருந்து விலகிக் கொள்ளச் செய்கிற அதிகாரத்தை பிரதம நீதிபதிக்குத் தருகிறது.

இந்த விதிதான் அந்தச் சட்டத் தொகுப்புகளில் மிக முக்கியமானது என சொல்லப்படுகிறது.

அங்கும் வடக்கு-தெற்கு!

இலங்கையில் ஆண்டு தோறும் 25 பேருக்கு "தனி கௌரவக் குடி மக்கள்" என்ற பெருமையை வழங்க இலங்கை பிரதமருக்கு அதிகாரமுண்டு.

இவ்வாண்டில் அப்படி கௌரவிக்கப்பட்டவர்களின் பட்டியலை இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இந்தியர், பாகிஸ்தானியர் உட்பட 25 அன்னியர்களின் பெயர்கள் அதில் காணப்படுகின்றன.

இவர்களில் ஒரு தென்னிந்திய வியாபாரியின் பெயரைக் கூடக் காணவில்லை.

பெரும்பாலும் வடஇந்தியருக்கும், 'போரா' சமூகத்தினருக்குமே அந்தக் கௌரவம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தப்பிவிட்டார்!

ஜென்ரல் நகீபின் முன்னாள் மெய்ப் பாதுகாப்பாளராயிருந்த காப்டன் முகம்மது ரியத், விமானம் மூலம் காவலிலிருந்து தப்பியோடிவிட்டார் எனத் தெரிகிறது.

அவர், முகம்மதிய சகோதரத்துவ நிறுவனத்திற்கும், ஜெனரல் நகீபிற்கும் தொடர்பிருப்பதாகக் கூறி தொடரப்பட்டுள்ள சதி வழக்குகள் சம்மந்தமாக போலீசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

* * *

கடந்த 1951-ல் சூயஸ் கால்வாய் பற்றிய ஆங்கிலோ-எகிப்தியநெருக்கடியின்போது, வேலையிலிருந்து நீக்கிய 176 பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு எகிப்து இப்போது நஷ்டஈடு தரும் என்றும், இதுபற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்படுமென்றும் எகிப்திய வெளிநாட்டிலாகா உதவிக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

* * *

சூயஸ் கால்வாய் பிரதேசத்திலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறி விடுவது என்று எகிப்து, பிரிட்டன் ஆகிய நாடுகளிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை எகிப்திய மந்திரி சபை அங்கீகரித்து விட்டதாகத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம். ஏ.